IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

CC NO. 468/2025

Date : 13.05.2026 PW 1/ LW1

| பெயர் | கஸ்தூரி | ஆதார் எண் | |
|---|---|---|---|
| கணவர் பெயர் | வாசுதேவன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | களத்தூர் | வயது | 40 |
| எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை

நான் களத்தூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 24.01.2018 அன்று மதியம் 02.00 மணியளவில் சில நபர்கள் கூட்டமாக என்னிடம் தகராறு செய்தார்கள். பின்னர் இரவு 07.00 மணியளவில் நானும் எனது கணவரும் எங்கள் தெருவில் நடந்து வரும் போது எதிரியின் வீட்டு முன்பு கூட்டமாக இருந்த சில நபர்கள் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி காயம் ஏற்படுத்தினார்கள். அப்போது கூட்டமாக இருந்ததால் யார் என்னை திட்டி காயம் ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் அந்த கூட்டத்தில் இருந்தார்களா என எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள சங்கதிகள் என்னவென்று எனக்கு தெரியாது. **அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 24.01.2018 அன்று மதியம் 02.00 மணியளவில் 1வது எதிரி குடி போதையில் என்னிடம் தகராறு செய்தார் என்றும் எனது கணவர் இரவு 07.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது அது பற்றி எனது கணவரிடம்கூறினேன் என்றும், நானும் எனது கணவரும் 1வது எதிரியிடம் மேற்படி சண்டையை பற்றி கேட்டபோது எதிரிகள் மூவரும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரி மகேந்திரன் கையால் எனது கன்னத்தில் அடித்து என் கையை பிடித்துக்கொண்டார் என்றும், எதிரி கார்த்திக் எனது நெஞ்சிலும் வயிற்றிலும் காலால் எட்டி உதைத்தார் என்றும், எதிரி

நேரு அவர் கையில் வைத்திருந்த தடியால் என்னை அடித்தார் என்றும், எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் என் விருப்பத்தின் பேரில் கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII, Code of Criminal Procedure)</u>

**<u>CC NO. 468/2025</u>**

**Date : 13.05.2026** **PW2/ LW2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வாசுதேவன் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | சரவணன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | களத்தூர் | வயது | 46 |
| எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

<u>முதல் விசாரணை</u>

நான் களத்தூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கஸ்தூரி எனது மனைவி. எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 24.01.2018 அன்று மதியம் 02.00 மணியளவில் சில நபர்கள் கூட்டமாக எனது மனைவியிடம் தகராறு செய்தார்கள். பின்னர் இரவு 07.00 மணியளவில் நானும் எனது மனைவியும் எங்கள் தெருவில் நடந்து வரும் போது எதிரியின் வீட்டு முன்பு கூட்டமாக இருந்த சில நபர்கள் எனது மனைவியை தகாத வார்த்தைகளால் திட்டி காயம் ஏற்படுத்தினார்கள். அப்போது கூட்டமாக இருந்ததால் யார் என்னை திட்டி காயம் ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் அந்த கூட்டத்தில் இருந்தார்களா என எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு <u>குறுக்கு விசாரணை</u>**

கடந்த 24.01.2018 அன்று மதியம் 02.00 மணியளவில் 1வது எதிரி குடி போதையில் அ.சா.1. கஸ்தூரியிடம் தகராறு செய்தார் என்றும் நான் இரவு 07.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது அது பற்றி என்னிடம் கூறினார் என்றும், நானும் எனது மனைவியும் 1வது எதிரியிடம் மேற்படி சண்டையை பற்றி கேட்டபோது எதிரிகள் மூவரும் எங்களை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரி மகேந்திரன் கையால் அ.சா.1. கஸ்தூரியின் கன்னத்தில் அடித்து அ.சா.1. கஸ்தூரியின் கையை பிடித்துக்கொண்டார் என்றும், எதிரி கார்த்திக் அ.சா.1. கஸ்தூரியின் நெஞ்சிலும் வயிற்றிலும் காலால் எட்டி உதைத்தார் என்றும், எதிரி நேரு அவர் கையில் வைத்திருந்த தடியால்அ.சா.1. கஸ்தூரியை அடித்தார் என்றும், எதிரிகள் எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார்

விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் என் விருப்பத்தின் பேரில் கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Code of Criminal Procedure)
CC NO. 468/2025

Date : 13.05.2026 PW3/ LW10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முஜீபுர் ரஹ்மான் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | ஆதம் | தொழில் | தலைமை காவலர் |
| கிராமம் | திருநாவலூர் | வயது | 38 |
| எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் திரு. முருகராஜ், உதவி ஆய்வாளர் திருமதி.எழிலரசி என்பவர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.01.2018 அன்று காலையில் தலைமை காவலர் திரு. முருகராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த களத்தூர் கிராமத்தை சேர்ந்த கஸ்தூரி, க/பெ. வாசுதேவன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று வந்து நிலைய குற்ற எண்.72/2018 ல் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக **இதச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(1)-ன் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கஸ்தூரி கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும்.** பின்னர் வழக்கு கோப்பினை திருமதி. எழிலரசி வசம் ஒப்படைத்துள்ளார். திருமதி.எழிலரசி அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.01.2018 அன்று வழக்கின் சம்பவஇடம் சென்று சாட்சிகள் குப்புசாமி, பார்த்திபன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான கஸ்தூரி, வாசுதேவன், முருகவள்ளி, அம்புஜம் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால் அன்றை தினமே 13.30 மணியளவில் சேந்தமங்களம் பஸ் நிறுத்தம் அருகில் நின்றிருந்த எதிரி நேருவை கைது செய்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட **அ.சா.1 கஸ்தூரிக்கு** சிகிச்சை அளித்த **மருத்துவர் ஷேக் அப்துல்லா** விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.1 கஸ்தூரிக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம்** என அவர்

வழங்கிய காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார். **அ.சா.1 கஸ்தூரிக்கு காயச் சான்றிதழ் அ.சா.ஆ.6** ஆகும். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை தலைமை காவலர் திரு. முருகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி-1 எதிராக **இதச பிரிவுகள் 294(b), 324, 506(1)**-ன் கீழும் 2, 3 எதிரிகளுக்கு எதிராக **இதச பிரிவுகள் 323, 506(1)**-ன் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே தயார் செய்து சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் சம்பவ இடம் செல்லாமலும் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது விசாரணை அதிகாரி தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.